03.11.2025
OS. No.250/2019

**வா.சா.2–** திரு.கோபாலகிருஷ்ணன், த/பெ.திரு.மாணிக்கம்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

வாதி அழைத்ததன் பேரில் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்து இருக்கிறேன். வாதிக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதியின் திருமணத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. வாதியை எனக்கு எப்படி பத்து வந்த காலம் தெரியும் என்றால் எனக்கு சொந்தமான காரை அவர் வாடகைக்கு எடுத்துச் செல்வார் அதன் மூலம் எனக்கு அவர் பழக்கமானார். அவர் திருவெறும்பூர் அருகே உள்ள திருவேங்கட நகரில் வசித்து வந்த போது அவரது வீட்டிற்கு நான் சென்றிருக்கிறேன். அவரது வீட்டில் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் அவர் மட்டும்தான் இருந்தார். வாடகைக்கு கார் கொண்டு போகும் போது சில நேரம் நான் கார் ஓட்டி செல்வேன். சில நேரம் ஓட்டுனர் ஓட்டி செல்வார். வாதியுடன் சில நேரம் அவரது பெண் தோழிகள் வருவார்கள். வாதி அவரது கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்பது எனக்கு தெரியும். வாதி உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் அவரது அப்பா அம்மா ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. வாதி வேலை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். அவர் என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. வாதி எதன் அடிப்படையில் வேலை பார்த்து வருகிறார் என்று கூறுகிறேன் என்றால்,

AdvocateW

அவர் படித்திருக்கிறார். தனியாக இருக்கிறார். அதனால் அவர் வேலை பார்ப்பதாக நான் கூறுகிறேன். அது என்னுடைய கருத்து ஆகும். வாதியை அவரது சகோதரர் வீட்டை விட்டு துரத்தி விட்டதாக சொல்வது எந்த வருடம் எந்த மாதம் என்றால் 2020 ஆம் வருடம் நவம்பர் அல்லது டிசம்பர் மாதம் ஆகும். அப்போது என் அக்கா மகள் திருமணம் நடைபெற்றதால் நான் வேறு காரை தான் அவருக்கு வாடகைக்கு அனுப்பி வைத்தேன். அதன் காரணமாக அந்த நிகழ்வு எனக்கு நினைவு இருக்கிறது. எனக்கு தொலைபேசி வாயிலாக வாதி தகவல் சொன்னதன் அடிப்படையில் தான் நான் சென்று போய் பார்த்தேன். அன்று இரவு சுமார் 8:30 மணியளவில் எனக்கு வாதி தொலைபேசியில் தொடர்பு கொண்டார். நான் சுமார் 10 நிமிடத்தில் அங்கு சென்று விட்டேன். அப்போது பக்கத்து வீட்டில் இருந்த ஒரு அம்மா மட்டும் பார்த்துக் கொண்டு இருந்தார். வாதிக்கு நான் பார்க்கும்போது காயம் இருந்தது. அதை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன். வாதிக்குச் சொந்தமான துணிமணிகள் மட்டும் வெளியே தூக்கிப் போட்டு இருந்தார்கள். நான் வாதியை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சொன்னேனா என்றால் சொன்னேன். அவரும் காவல் நிலையத்திற்கு செல்வதாக கூறினார். நான் சென்று பார்க்கும் போது வீடு பூட்டப்பட்டு இருந்தது. வீட்டில் ஆட்கள் யாரும் இல்லை. அதன் பிறகு நான் எனது வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டேன். வாதி எனது வீட்டில் இரண்டு நாட்கள் இருந்தார். வாதியை என்ன காரணத்திற்காக வீட்டை விட்டு வெளியே அனுப்பினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி மீது

திருவெறும்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து அவர் சிறைக்குச் சென்று வந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியும். அவருக்கு நான் ஜாமீன் ஏற்பாடு செய்யவில்லை. வாதியிடம் அவர் மீது எதற்காக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று கேட்டேன். அவர் அந்த விவரம் என்னிடம் சொல்லவில்லை. நான் வாதிக்கு வேறு வீடு வாடகைக்கு பார்த்து கொடுத்ததாக சொல்வதற்கு வாடகை ஒப்பந்த பத்திரம் எதுவும் கிடையாது. வாதி அவ்வாறு வாடகைக்கு குடியேறிய வீட்டின் கதவு எண் எனக்கு தெரியுமா என்றால் கதவு எண் தெரியாது. வாதி தற்போது வரை அங்கு தான் குடியிருந்து வருகிறாரா என்றால் இல்லை. சுமார் ஆறு மாத காலம் அந்த இடத்தில் வசித்து வந்தார். அதன் பிறகு வாதி எங்கு குடியிருந்து வருகிறார் என்பது எனக்கு தெரியாது. 2021 ஆம் வருடம் ஜூன் மாதத்திற்கு பிறகு எனக்கும் வாதிக்கும் இடையில் வாடகை கார் தொடர்பான தொடர்பு எதுவும் கிடையாது. கடைசியாக நான் வாதியை வீட்டில் கொண்டு தனியாக வாடகைக்கு குடி வைத்த பிறகு இடையில் அவ்வப்போது நலம் விசாரிப்பார். அதன்பிறகு வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிப்பதற்கு என்னை அழைத்தார். வாதியின் சகோதரர் வாதிக்குரிய உடைமைகள் மற்றும் பொருட்களை வெளியே தூக்கி விட்டு எறிந்ததாக கூறப்படக்கூடிய சங்கதி எனக்கு வாதி கூறியதன் அடிப்படையில் தான் தெரியும். வாதியை அவரது சகோதரர் வீட்டை விட்டு வெளியே விரட்டவில்லை என்றும், அவரது உடைமைகள் மற்றும் பொருட்களை தூக்கி வெளியே எறியவில்லை என்றும், வாதி அவரது தகப்பனாரை அடித்து துன்புறுத்தி கொடுங்காயங்கள் ஏற்படுத்திய காரணத்தினால்

புகாரின் காரணமாக கைது செய்யப்பட்டு சிறைக்குச் சென்றார் என்றும், அதன் பிறகு அவர் அந்த வீட்டிற்கு செல்வது கிடையாது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. வாதி எனக்கு வேண்டியவர் என்ற காரணத்தினால் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adpcpe